

சிவமயம்.

# ஜீவோற்பத்தி சிந்தாமணி.

காப்பு.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுன் னு.

நூற்பெருமை.

நமசிவயவென் றனாதிமந்திரம்
நவ்வொடுமவ்வும்போய்மாய்கையலமதாய்
யவ்வானசிவன் வவ்வுறச்சேர்ந்திடில்
சிவ்வினிலொன்றாய்ச் சிவமெனலாமே.

இதன்பொருள்.

நகாரம்-திரோதாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்கும்.

மகாரம்-கிரியாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்தில்மெய்யென்றழுந்தும் சிவத்திலே ஆசையைவருவித்துச் சிகாரத்தோடுகூடிநிற்பது.

நகாரம்-நின்றசிவத்திலே - ஆசையைவருவித்து வகாரத்தோடுகூடிநிற்பது.

நின்றவெழுத்து மூன்றும் செபிக்குமிடத்து-ஒன்றாகும்.

நமசிவயவென்றோதப்பட்ட வைந்தெழுத்துக்குள்ளே ஐந்தெழுத்துண்டு. இந்த ஐந்தெழுத்திலும் மூல அட்சரமாகிய அகா[illegible]

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

ரம்-மகாரம் விந்து-நாதம் என்கிற அட்சரங்களைச் சேர்ப்ப தெப்படியெனில், சிகாரத்தில்-அகாரமும், வகாரத்தில் உகாரமும், யகாரத்தில்-மகாரமும், விந்து நகாரத்திலும், நாதம்-மகாரத்திலுமாம், இந்தப்படிசேர்ந்த ஐந்தெழுத்தும் இருக்கிறவிதமெப்படியெனில்,

நகாரமானது-விந்து-திரோதாசத்தி, பிரபஞ்சத்திலேயிச்சையை வருவிக்காமல் சிவத்திலே யிச்சையைவருவித்துச் சிகாரத்திலே ஐக்கியமானது.

மகாரமானது நாதம் கிரியாசத்தி, பிரபஞ்சத்தை மெய்யென்று நடத்தாமல் சிவத்திலே ஆசையை மெய்யென்று நடத்தி வகாரத்தில் ஐக்கியமானது, இந்த எழுத்தை ஓத முன்சொன்ன மூன்றெழுத்தும் ஒன்றாயின.

அதெப்படியெனில் பராபரமாகிய பரமேசுவரன் ஆதிகாலத்திலே ஆன்மாக்களை ரட்சிக்கிறதற்கு வருவான் புரிந்தமையால் பராபரையான சத்தியின் கையிலே தம்முடைய பருவிரலைக் கொடுக்கப்பண்ணி கிரகையிலே பராசத்தி பொறுக்கமாட்டாமல் ஐவென்று அப்போது பராபரமாகிய பரமேசுவரன் ஆவென்றமைந்தார் அந்த வெழுத்து அகாரமானது. அப்போது பராசத்தி அடக்கமாய் ஊவென்றாள். அந்த எழுத்து உகாரமானது. இந்த இரண்டெழுத்துக்கும் சத்தியும் சிவமுமானது, இவ்விரண்டெழுத்தும் ஓரட்சரமானது எப்படியெனில்.

அகாரம்-இலக்கத்தில்-அ, பின்சொன்ன உகாரம் - இலக்கத்தில்- உ-இவ்விரண்டுமாய தொகைக்கு-௰ ஆயின.

யவ்வானது சீவன் அந்தச்சீவனைச் சத்தியுஞ் சிவமுமாகக்கூடி ஆத்துமாக்களை வினைகளை வருவிக்கிறது நகாரமானது-திரோதாசத்தி-இச்சினைகளை மெய்யென்றழுந்தி மிகவும் இருகலையுண்டாக்கினது மகாரமானது-கிரியாசத்தி, இவையிரண்டினாலும் பற்றாமல் நிற்கின்றது யவ்வானது சீவன், இவையிரண்டும் விந்துநாதமானது, இச்சை உருக்கதைச் சத்தி பொறுமெனன் றறியாமல் நின்றது கேவலமான இருள், எப்போது பெறுவோமென்ற விசாரிக்கையானபகல், இவையிரண்டுக்கும் இரவுபகலென்றுபேர். இதுவன்றி ஞானமுறைமைக்குச் சகலா கேவலாவத்தையென்றும் பேர்.

சிவப் பிரத்திலே சினைகமாயிருக்கையினாலே பராபரமாகியபர மேசுரனுயிரான் மானைப்பிடிக்க மான்வேட்டைகொண்டதுபோல இராப்பகலே குருவென்று வடிவெடுத்துக்கொண்டு ஆதிகபிலமாமுனிவர் திருவள்ளுவநாயனார்வடிவமாய்த் திருக்குருந்தீசுவரராகிய திருமூலதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய உபதேசவைப்பாகும்.

சிவாயநம.

# தோற்றமும் ஒடுக்கமும்

அறியும்படி.

பராபரமாகிய பரமேசுவரன்
சராசரம் படைக்கத் தானினைந்தருளி.

பராபரத்திற் பரந்தோன்றி, பரத்திற் சிவந்தோன்றி, சிவத்திற் சத்திதோன்றி, சத்தியில் நாதந்தோன்றி, நாதத்தில் - விந்துதோன்றி, விந்துவில் சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில்-மகேசுரந்தோன்றி, மகேசுரத்தில் ருத்திரன்தோன்றி, ருத்திரனில்-விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில்-பிரம்மாதோன்றி, பிரம்மாவில் ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில்-வாயுதோன்றி, வாயுவில்-அக்கினிதோன்றி, அக்கினியில் அப்புதோன்றி, அப்புவில் பிருதிவிதோன்றி, பிருதிவியில்-அன்னந்தோன்றி, அன்னத்தினின்றே நரமிருக பட்சி தாபர சங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த்தோன்றின அடைவே நரமிருக பட்சி தாபரசங்கமாதிகள் அன்னத்திலொடுங்கி, அன்னம் பிருதிவியிலொடுங்கி, பிருதிவு-அப்புவிலொடுங்கி, அப்பு-தேயுவிலொடுங்கி, தேயு-வாயுவிலொடுங்கி, வாயுவு-ஆகாசத்திலொடுங்கி, ஆகாசம் - பிரம்மாவிலொடுங்கி, பிரம்மா-விஷ்ணுவிலொடுங்கி, விஷ்ணு-ருத்திரனிலொடுங்கி, ருத்திரன்-மகேசுவரத்திலொடுங்கி, மகேசுவரம்-சதாசிவத்திலொடுங்கி, சதாசிவம் விந்துவிலொடுங்கி, விந்து-நாதத்திலொடுங்கி. நாதம் - சத்தியிலொடுங்கி, சத்தி-சிவத்திலொடுங்கி, சிவம்-பரத்திலொடுங்கி, பரம்-பராபரமாகிய பரமேசுவரனிடத்தில் ஒடுக்குமெனக்காண்க.

# அத்துவாதத்துவம்.

அன்னத்தில்-ரசந்தோன்றி, ரசத்தில்-உதிரந்தோன்றி, உதிரத்தில்-மாம்சந்தோன்றி, மாம்சத்தில் மேதைதோன்றி, மேதையில்-அஸ்திதோன்றி, அஸ்தியில்-மச்சைதோன்றி, மச்சையில் சுக்கிலந்தோன்றி, சுக்கிலத்தில்-சுரோணிதந்தோன்றியது.

இப்படித்தோன்றிய சுக்கிலசுரோணிதங்கள் அணுப்பிரமாணமுன்ன ஒருருபுபோலப்பாய்ந்து சுழிக்கக் கண்டிட்டம் பேரிடைப்பும்போலே கண்டித்து நடுவெளியில் ஒருசுழிமுனையுடையாய் அம்முனையினடுவே ஓரதுவாரமுண்டாய் அத்துவாரத்தினடுவே இரண்டெழுத்துகளாலே அபிமந்திரித்துப் பிண்டமாகி வெருமளவில்,

சுக்கிலம்பெருகில் ஆணும், சுரோணிதம்பெருகில் பெண்ணும் இந்தச் சுக்கிலசுரோணிதம் சேரிடத்தப்பெருகில் இரட்டைப்பிண்டமாம், அப்பிண்டமானது நீர்வழியேபெருகில் - ஊமையாம், மலத்திடையேபாயில்-மந்தனும்,

இப்படித்துக் கெற்பவுற்பத்தியொன்றுங்காலத்தில் இரேசக்கலையென்றும், இரசக்கலையென்றும் இரண்டுகலைகளுண்டு.

அவற்றுள் எரிகலையிலே பிராணோத்திரியம்பாயில் இடப்பாகநிகொண்டு இருதியென்றும்புரம்சென்று விழுக்காமல் கன்றேறுதாய்ச்சென்றுதொடர்ந்தாற்போலே பிராணவாயுவை ஆதாரமுண் விட்டுக்கொண்டுசெல்லுமளவில் இமகிரமென்றும் இரண்டட்சரமும் பின்தொடர்ந்துசென்று அச்சுக்குள்ளச்சாக அவமென்னு மூலாட்சரத்தில் அமைத்துப் புகவிட்டு இடிச்சிலைவாசல்போலே ஓடி அக்கினியாவென்னு மந்திரக்கயிற்றாலே சுருக்கிக்கட்டி சிவாக்கினாசக்தியாலே புத்திகளாயிட்டு தான் ஒருதனியாய்நின்று இந்தக்கருவை வளர்க்கும்படியாய் கெறுப உற்பனத்தை உதானவாயுவான மூலவாயுவளர்க்கும்.

அது எப்படியெனில் - செற்பாருதியென்னும் பவக்கடலில் புஞ்சனைவாயவளர்க்கும்.

அது எப்படியெனில் - எவ்வண்ணெயுந் தண்ணீரும்போல நிற்கி
ற சுக்கிலசுரோணிதத்தைப் பாலும்நெய்யும்போலே பாய்ந்தவுடனே
கற்பிக்குங்கற்பைச் சுரக்கிறைப்போலே வாசலையடைத்துக் கருவை
வெளியாக்கி ஒன்றாந்திங்களில் உதிரந்திரளும், இரண்டாந்திங்களில்
கொழுந்துவிட்டு அச்சு அமரும், மூன்றாவதில் - மாங்கிசத்திரண்டு
மூட்டுருவாகும், நான்காவதிலோ - பிண்டமாய் நரம்புநாடிகளை
யும், ஐந்தாவதில்-பஞ்சவன்னமாய் இந்திரியகாத்தால் அழிபிலும்
அழியும். செழிக்கிலுஞ் செழிக்கும், ஆறாமாதத்தில்- அறிவுபுகுந்து
ஆமையின்வடிவமுற்று கால்கைகள் வகுக்கப்பட்டு நவத்துவாரங்க
ளுமுண்டாகும், ஏழாமாதத்தில் சற்றுத்திலிருந்து எழுந்து முழங்க
முற்று கெற்பத்தைச்சூழ்ந்து புரளும், எனெனில்-௭௨-நாடிநரம்பு
களும்-ஆறாதாரமும்-ஐந்தெழுத்தும்-ஐம்பத்தோராட்சரமும் - பஞ்ச
பூததேவதைகளும்-நாலுருக்குமத்துடனே கொழுந்துவிட்டுப் பேதை
யாம், எட்டாமாதத்தில்-நீட்டி முடக்கி தாயுண்ட அன்னசாரத்தைத்
தொப்புளின்வழியாகவுண்டு பிள்ளையிறுடல்வளர்ந்து தாயுடன்றோ
ன்றி உயிருடன் ஆடும், ஒன்பதாவதில் - தலைகாலளவும்ரோமமுத்துவா
ரமுண்டாய் ரோமக்குருத்து அறிவுடனே உடக்கொண்டனையில்
விதனப்பொறுக்கமாட்டாமல் ஈசுவரனைநோக்கித் தவஞ்செய்து தொ
ழுதகையுடனே யிருந்து ஜனனத்தை யொழித்தருளவேணுமென்று
வணங்கிநிற்கும், பத்தாவதுமாதத்தில் நிறைந்தபிண்டமாய் மலைமே
லிருந்து தலைகீழாய் விழுந்தவர்களைப்போலே அபானவாயுவின் பல
த்தினாலேபூமியில்விழுந்தும் முன்னுள்ள நினைவுகளைமறவாதிருக்கும்

இப்படி பரப்பிரம சிருஷ்டிப்பினாலே கர்ப்பந்தரித்து வாழ்வு
பெறும்.

அப்பேர்ப்பட்ட பிராணவாயுவு வலப்புறமோடில் ஆண்பிள்
ளையாம், இடப்புறமோடில் பெண்பிள்ளையாம், வாயுவிரண்டும் ஏகோ
பித்தோடில் அலியாம்-அதாவது-பேடி-அல்லது குறியற்றது.

அந்தவேளையிலே நடந்தவாயு கேடியாமல் ஐந்துநாழிகையள
வு நடந்திருக்குமாகில் அந்தப்பிள்ளைக்கு வயது-௱. அந்த அளவு
குறையுமாகில் பிள்ளைக்கு வயதுங்குறையும், வாயு நிரம்பியோடி
ல் அவயவங்களுண்டாகும், அவ்வாயு சிதறியோடில் அவயவங்கள்
குறையும், முதன்மையில் கெர்ப்பாசனத்தில்போகிக்கும்பொழுது

ஸ்துகுணத்திலே ஒன்றாவது மாதாபிதாக்களுக்குண்டானால் மக்களுக்குமுண்டாகும்.

அந்தவேளையில் வாயுவுநின்றியங்குமாகில் நிலத்தின்நிறமே பிள்ளைகளுக்கு நிறமாகும். மாதாபிதாக்களினுடைய மனமும் குணமும் வாயுவுமொன்றாகுமாகில் அந்தப்பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாம்.

மாதாபிதாக்களுக்கு அந்தமூன்றுவிதமுஞ்சேதறில் பிள்ளை மரித்துப்போம். கர்ப்பாசனத்தைவிட்டு கெற்பங் கவிழிலும் போகிக்கிலும் அக்கினி மிகுக்கிலும் வாயு கலங்கிலும் மலமாம். ஸ்திரீபுருஷனிருவருக்கும் மூலாக்கினி அதிகரித்தால் அந்தகர்ப்பஞ் சுவறிப்போம்.

இப்படி கன்மானுபவத்திற்கீடாக எடுக்கப்பட்ட சரீரத்தில் முன்சொன்னவழியே அருந்தின அன்னாகாரமானது முப்பதுநாழிகையில் எங்ஙனமெனில்,

மல-ஜல-ரத்தமாகிய மூன்றுகூறாகும்-இதில் இராப்பகல் அறுபதுநாழிகையில் மலஜலமென்ன இரண்டுகூறு கழிந்துபோம். மற்றொருகூறாகிய இரத்தமானது சரீரத்தில்தங்கும், அந்த இரத்தமானது ஏழிலொருபங்கு இந்திரியமாம், மற்றபங்குகளோவெனில்-தோல்-உரோமம்-சதை-நரம்பு-மேதை-அஸ்தி-குடும்பி-மூளை-சுக்கிலம்-இரப்பு-குடல்-நரம்பு முதலிய இடங்களுக்கு முறையே-௭௨-நாழிகைவீதம் பரவிநிற்கும்.

இனி இந்தச்சரீரத்தில் இருவினைக்கதவுங்கூட்டி மூலத்தண்டாகிய நெடுங்கயிற்றை முகட்டுவளையாகச்சேர்த்து பழுவெலும்பாகிய வரிசையிட்டு நரம்பாகிய யாக்கையாலேகட்டி உதிரமாகிய ஜலத்தாலே மண்கூட்டிச் சுவரேற்றி, ரோமமாகிய கத்தையாலே மேய்த்து எடுக்கப்பட்ட வீட்டுக்கு நவத்துவாரமென்னும் வாசலிட்டு, அச்சையாகிய கதவுகளிட்டு, பல்லாகிய தாள்பூட்டி, நாவாகிய ஓங்காரம் பாச்சிப் பண்டமாகிய பஞ்சேந்திரியங்களுமுடைத்தாய்நிற்கும்.

இந்தச்சரீரத்தில் பதினாறுகதவுபூட்டிமவீணைத்தண்டும், மொழியென்ன மச்சாணெலும்பும், மச்சாண்சதையும், அஞ்சறுவும், அ

, ஏழுகட்டூலும், எட்டுத்தூணும், நாலுசாண் - பருமனும், ஐஞ்சாண் நீளமும், மூப்பத்திரண்டுமுழக்கூடலும் இருக்கும்.

இது மூலாதாரத்தைத்தொட்டு ஆக்ஞையளவும் பெருநரம்புகள் ௰௭த-சிறுநரம்பு-௰௨த-கையிலுங் காலிலும் பெருநரம்பு-எத - சிறுநரம்பு-௰௨த-நாபிதானத்தில் பெருநரம்பு ௩-சிறுநரம்பு ௨த - நவத்துவாரத்துக்கும் வாசல்-௯-க்கு-பெருநரம்பு-௯௰௱-சிறுநரம்பு ௯௰௱-முடியில் பெருநரம்பு ௯த சிறுநரம்பு ௯த - எலும்பிலுங் குடலிலும் சிறுநரம்பு-எ௩ ஆகநரம்பு நாடி-எ௰௨த.

இனி கால்களிலும் கைகளிலும் சந்துப்பொருதல்-௯௮-கழுத்திற்குக் கீழ்ச்சந்து-அ௯-கழுத்துக்கு மேற்சந்து-அ௯-ஆக சந்துபொருதல் ௯௯௭.

இனி நாசியில் ஜலம் பலம்-௬௪-எலும்பில்-ஜலம்பலம்-எ - மாம்சத்தில் ஜலம்பலம்-௨௪-ஆக ஜலம் பலம் ௯௯.

காலிலும் கையிலும் எலும்புகள்-௱௯௰-மூலாதாரத்தைத்தொட்டு ஆக்ஞையளவும் மொழியெலும்பு-௯௰ - கழுத்துக்குமேல் பொடியெலும்பு-௯௱-இருடக்கத்திலும் எலும்பு-௨௰ ஆக எலும்பு ௱௰.

இனி சரீரத்தில்-௯௨-கோடி ரோமத்துவாரங்களும், நாளொன்றுக்கு-௨௪௲௱-சுவாசமும்-௯௰ தத்துவமும்-௯௱ பலம்-மாம்சமும்-௨௰க்குபித்தமும் - ஆழாக்குச்சேத்துமமுங்கூடி சரீரத்திலே நாளொன்றுக்கு நடக்கும், பிராணவாயுவு ௰௨ - விரல்பிரமாணம் புறப்பட்டு-நாலுவிரல்பிரமாணங் கழிந்துபோய்-அ-அங்குலம் - உட்புகுருகி சப்ததாதுக்களை வளர்க்கும்.

இனி ஜீவராசிகளின் வாழ்நாளின் விவரமெப்படியெனில்.

வயதளவு-௱-க்கு-௰-வயதளவும்-இளமை, ௨௰-வயதினளவும் வாலிபம்-௨௰ ௯௰-௯௩-௪௰-இதுவரையில்-யௌவனம்-௪௰-௫௰ இவைகளில் கவுமாரதிசையடைந்து ஒளி மழுங்க லுற்று-பிரிதிவு-அப்புவை நெருக்கும், அறுபதில்-அப்பு-தேயுவைநெருக்கும், எழுபதில்-தேயு - வாயுவைநெருக்குதலினால் தாது மாயாவுணர்வு டண்டும்போலே செலுத்தும், எண்பதுவயதில்-வாயுவு-ஆகாசத்தைநெருக்கும், தொண்ணூறுவது வயதில் ஆகாசம்-ஆத்துமாவைநெருக்கும், அதனால் மல ஜலம்

இடைவிடாமல் ஒத்துநிற்கும், நூறுவது வயதில் ஆத்மாநுபூதியைநோக்கும்,

இப்படிப்பட்ட சரீரமானது முன்சொன்ன அறுதிக்களில் முந்தாயல் சற்குருவின்தாளே சரணமென்று திருக்குருநீசுரர் ஆதி திருமூலதேவருக்கு திருவுளம்பற்றியருளிய முறைமைகூறினேன்.

தோற்றவொடுக்க முற்றும்.

---

## அத்துவாத்துவகலஸ்ஞானம்.

---

அட்சரம்-ஆதாரம்-கரணம்-அவஸ்தை-மொழி-புலன்- இளமை வறுமை-வேதம்-புராணம்-சரிதை-கிரியை-யோகம்- மெய்ஞ்ஞானம் இவ்விதமென்று குருவருள்செய்யச் சிடன்கேட்டுத் தெளிந்து அருட்பிரகாசத்திலே சர்வ அஞ்ஞானங்களையும் ஞானாக்கினியினாலே சுட்டுப்போட்டு களிப்புற்று சிவத்துடனேநின்று தெளிவுறவேயப்போதம் சிவஞானியென்று ஒட்டியாணம் பூட்டி ஆனந்தமென்னும் ஞானாமிர்தத்தையருந்தி ஓம் நமாவென்னும் ஞானமுத்திரையிட்டு அறியாப்பதவியாக மோட்சசாம்பிராச்சியத்தை யடைபவருக்கே ஜீவன்முத்தனென்று பேராம்,

இப்படிப்பட்டபெருமையை யடையுமவர்களுக்குப் பரகதிகிடைக்காததற்குக் காரணமேதோவெனில்.

பாசநீக்குவிலகல்.

காயாபுரியென்னும் பட்டணமும், அந்திராசுத்திரமென்னும் உட்கோட்டையும், நவத்துவாரமாகிய வாசல்களும், இரணமென்னுமுகப்பும், சுவாதிஷ்டானம்-மணிபூரகம்-அநாகதம்-விசுத்தி - ஆக்ஞையென்னும் அரண்களும், அக்கினிமண்டலம்-ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம்-ஆகிய சொர்க்க-மத்திய-பாதாளமாகிய லோகங்களும், அங்காராஜன்-மூர்க்கராஜன்-என்னும் இரண்டு இராஜர்களும், மூலப்பிரகிருதியென்னுந் துன்மந்திரியும், பஞ்சபூதர்களென்னும் பிரதானியர்களும், அலகையென்னும் வீதிகளும், இச்சாசத்தி- கிரியாசத்தி [illegible]சத்தி- ஞானசத்தி - பராசத்தியென்னும் ஊழியக்காரிகளும்,

ஆசையையென்னும்-அடப்பக்காரனும், கெர்விதனென்னும் காளாஞ்
சிக்காரனும், காலகர்மனென்னும் தளவாயும், மனம்-புத்தி-சித்தம்-
ஆங்காரமென்னும்காணிக்காரனும்,மாயாப்பிரபஞ்சமென்னும் வண்
ணிநாயகப்டாடிகரும், சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னும் கொல்நா
யக்கர்களும், காம-குரோத-லோப-மோக-மத-மாச்சரிய இடும்பை ஆ
ங்காரமென்னும் கள்ளரும், இத மகிதமென்னு மல்லர்களும், ஆண
வம்-மாய்கை-காமியம்-என்னும் கோட்டைக்காரரும், வாக்கு-பாதம்
பாணி-பாயுரு-உபத்தம் என்னும் கன்னக்காரரும், சாக்கிர-சொப்ப
ன-சுழுத்தி-துரியம்-துரியாதீதமென்னும் தலையாரிகளும், அன்னம
யம்-பிராணமயம்-மனோமயம்-விக்ஞானமயம் - ஆனந்தமயமென்னு
ம் காலாள்களும், வாயு-தேயுவென்னும் புரவிகளும், மனோபதியெ
ன்னும் கர்ணிகனும், நவகோடியென்னும் ராவுத்தரும், இருதயபா
தமென்கிற தானுபதிகளும், சதகோடி மகாமந்திரமென்னும் உபத
ளமும், வாத-பித்த-சேத்துமமென்னும் பரிவாரமும், அஷ்டமதமெ
ன்னும் யானைகளும், நாலுவேதமென்னும் ரதங்களும், அசுத்தம்-சு
த்தமென்னும் தேவியரும், இருவினையென்னும் தோழிகளும், இவர்
கள்யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு தங்களில்தாங்களே ஒரு
வருக்கொருவர் ஒப்புரவற்றவர்களாய்மூன்றுமதிற்காயாபுரிக்கோ
ட்டையை வளைந்துகொண்டு ஒன்பதுவாசலுக்கும் அஷ்டமதமெ
ன்னும் யானைகளை விடுத்து உத்தண்டஞ்செய்கையில் ஒருவருக்கொ
ருவர் தங்களால் இந்தக்கோட்டையை ஆளுகிறதற்கு சாத்தியப்ப
டாமல் காரியஉபாதியாலும், காரணஉபாதியாலும், தூலசூக்குமா
திதேகத்தினாலும், சதுர்விதோபாயத்தினாலும் ஆராய்ந்து இந்தக்கோ
ட்டையைக் கைக்கொள்ளும்படி பராபரமாயிலங்குகின்ற சற்குருநா
தன் மானைப்பிடிக்க மான்சட்டை யுடுத்ததுபோல திருநந்திதேவரா
ன சற்குருநாதர் ஆதிகபிலராகிய திருவள்ளுவராய் திருமூலதேவரு
க்குத் திருவாய்மலர்ந்தருளியவாறு இதயமென்னும் வில்லுக்குப்
புரியென்னும் நாணியைப்பூட்டி அறிவென்னும் அம்பைத்தொடுத்
து குருவென்னும் இலக்குநோக்கி மூலாதாரத்தின் இரண்டுநாகு
நெட்டெழுத்தின் நடுகடுத்தெழுத்திலேயிருந்து வம்மென்றுவளைத்
து சம்மென்று சன்னிதனைய் அங்கிஷாவென்றியக்குவித்து சம்மென்
று ஆக்ஞையாசக்கரத்திலேபுகுந்து அக்கினிமண்டலத்தில் அனைவரை

யுங் காண்பித்துக்கொண்டு ஆயாவாளென்னும் இடை பிங்கலை இரண்டுக்கும் படிக்கதவிட்டு ஆதிமூலமென்னும் ஆனையின்மேற் கொண்டு தண்டுக்குந் தனுவுக்கும் நடுக்குத்தென்னுங் கோசக்கயிற் றுக்குள்ளாக அன்னதானத்தி லூற்றளவில் அங்கென்ற மதைக் ஆதிகாசமும் அவ்வையும் பதியுங்கொண்டு நடுவணைக் ரு த்திராக்னியான பன்னிரு சமுத்திரத்திலே ஆனை நீரோட்டம்வித் து ஞானபரமென்னுங் காவணமிட்டு அங்கென்ற பேயைக்கீழ் பற்ற ளவில் சித்திரநாடிவழியேசென்று சந்திராபுரியென்னும் பண்டல முங்கொண்டு அக்கினிமண்டலத்தில் அஞ்செழுத்திலேயும், ஆதித் தமண்டலத்தில் மூன்றெழுத்திலேயும், சந்திரமண்டலத்தில் ஒரெழு த்திலேயும், ஆசனமாயிருந்தபிறகு திரிமண்டலத்தையும் பின்னிட்டு மந்திரிபுரிதேசப்படுகை நீங்கக் காயாபுரியென்னும் பட்டணத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டு, அதிகாயனென்னும் பிரபஞ்சங்களையெல்லா ம் கருவேரறுத்து, பின்பு சற்குருஞானப்பிரகாசமான மனோந்திரத் திலேயெழுந்தருளி, பின்பு அறிவுகந்து நரலோகங்கொண்டருளி, பின்புகாயாபுரியைநோக்கி திருநந்திதேவர் ஆதியையறிந்தரு ளன்றுவர்சாட்சியாகத் திருமூலதேவருக்குத் திருவுளம்பற்றியருளி ய முறைமையிலே திருமூலதேசிகர்நின்று நகைசெய்தளவில் காயா புரிபட்டணத்தில் யோகாசிரியுங்கெட்டு இரவுகெத்தருவபதாய்சேனை யும்பட்டு ஆயக்கினிவேர்களும் சிறப்புண்டுபோய் காயாபுரியென் னும் பட்டணத்தில் சொர்க்க-மத்திய-பாதாளலோகமளவாக திருவ டியைவைத்துக்கொண்டு ராச்சியஞ்செய்தபடிக்கு திருநந்திதேவர் ஆதி கயிலமகாரிஷி திருவள்ளுவர்சாட்சியாகத் திருமூலதேவருக்கு அ பயாஸ்தமுங் கொடுத்தருளி அபிஷேகமுஞ்சூட்டி சித்தார்களும் வேதாந்தமுங்கடந்த நாதாந்தமுடிவான அமுர்தபஞ்சாட்சர தரு வதிலையில் குதப்புகட்டி இப்படி யுணர்த்திப்பருளிய முறைமையை உட்பட்டுத் தேடாதவன் சிவஞானியல்லவென்று இந்தமுறைமையை உட்பட்டுத்தேடின பெரியோர்களுக்குப் பராபரத்தில் உத்தாங்களு ம் வெளியாயிருக்கும்.

பிண்டத்திற்கண்ட பொருள் அண்டத்திற்காணலாம் அண்டத் திற்குள்ளது பிண்டத்துமுண்டெனக்கொள்க.

ஜீவோற்பத்திசிந்தாமணி முற்றும்.

உ

சிவமயம்.

# தத்துவதீபிகை.

## சரீரத்தினளவு பிரமாணாதிகளின் விவரம்.

இந்தச் சரீரமானது அவரவர்கள் கையினல் ௮ - சாண் நீளமும் ௪ - சாண் பருமனும், அல்லது ௯௬ - விரற்கடை பிரமாணமுமுள்ளது. இதற்குள் ௯௬ - தத்துவங்களடங்கியிருக்கின்றன.

அவையாவெனில்.

வாசல்கள் - ௯ - பொறி - ௫ - புலன் - ௫ - ஆதாரம் - ௬ - மண்டலம் ௩ - நாடி - ௰ வாயுவு - ௰ - தாது - ௭ இராகம் - ௮ கோசம் ௫ - காரணம் ௪ - அவத்தை ௫ - குணம் - ௩ மலம் - ௩ - வியாதி ௱ ஆக ௯௬.

இவைக்கு விபரம்.

செவிகள் - ௨ கண்கள் - ௨ - நாசிகள் ௨ வாய் - ௧ - குய்யம் - பெண்குறி - அல்லது - ஆண்குறி ௧ - குதம் அல்லது அபானவாயு ௧ - ஆக வாசல்கள் ௯

சுரோத்திரம் - ௧ தொக்கு - ௧ - சட்சு - ௧ சிக்குவை - ௧ - ஆக்கிராணம் - ௧ ஆக பொறிகள் ௫.

இவைகளினியற்கையாவன.

சுரோத்திரமென்பது - செவி - இது ஆகாசத்தினிடமாய்நின்று சத்தத்தையறியும்.

தொக்கு - என்பது உடம்பு, இது வாயுவினிடமாய்நின்று பரிசத்தையறியும்.

சட்சுவென்பது - கண், இது - தேயுவினிடமாய்நின்று ரூபத்தையறியும்.

சிக்குவையென்பது - நாக்கு - இது அப்புவினிடமாகநின்று ரசத்தையறியும்.

ஆக்கிராணமென்பது - மூக்கு - இது பிருதிவியினிடமாகநின்று கந்தத்தையறியும்.

இவைகளை ஞானேந்திரியமென்னப்படும்.

MAHAMAHODADHUVAVA

## கன்மேந்திரியமாவன.

வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம் ஆக-௫.

இவைகள்-முறையே, வசனம்-கமனம்-தானம்-விசர்க்கம்-ஆனந்தம் இவைகளாம்.

ஆகாசத்தினிடமாகநின்று வசனிப்பது-வாக்கு.
வாயுவினிடமாகநின்று கமனிப்பது-பாதம்.
தேயுவினிடமாகநின்று இடல் ஏற்றலானது-பாணி.
அப்புவினிடமாகநின்று சலமலாதிகளைக் கழிதல்-பாயுரு.
பிருதிவியினிடமாகநின்று ஆனந்திப்பது உபஸ்தம்.
இவைகள்-கன்மேந்திரியங்களாம்.

---

## தன்மாத்திரைகளாவன.

சத்தம்-பரிசம்-ரூபம்-ரசம்-கந்தம் ஆக-௫,

சத்தமானது-ஆகாசத்திலும்-செவியிலுமொடுக்கும்.
பரிசம்-வாயுவிலும்-உடம்பிலுமொடுக்கும்.
ரூபம்-தேயுவிலும்-கண்ணிலுமொடுக்கும்.
ரசம்-நீரிலும் நாவிலும்-ஒடுக்கும்.
கெந்தம்-பிருதிவியிலும் மூக்கிலும் ஒடுக்கும்.
வசனம்-வாக்கிலும்- ஆகாசத்திலும் ஒடுக்கும்.
கமனம்-வாயுவிலும்-காலிலும் ஒடுக்கும்.
தானம்-தேயுவிலும் கையிலும்-ஒடுக்கும்.
விசர்க்கம்-அப்புவிலும் மூசத்திலும் ஒடுக்கும்.
ஆனந்தம்-பிருதிவியிலும்-குய்யத்திலும் ஒடுக்கும்.

---

ஆக பொறி ௫-க்கும்-புலன்கள் ௫-க்கும் -விவரமிதுவாம்.

ஆறாதாரமாவன.

மூலாதாரம்-சுவாதிஷ்டானம்-மணிபூரகம்-அனாகதம் - விசுத்தி-ஆக்ஞை இவைகளாம்,

இவைகளின்விவரம்.

மூலாதாரமாவன-காலெலும்பு-உ-ம்-கதிரெலும்புங்கூடியவிடம் குய்யம். குய்யத்துக்கும்-குதத்துக்கும் நடுவே குண்டலிவட்டமாய் அந்தவட்டத்துக்கு நடுவே திரிகோணமாய் அந்த திரிகோணத்துக்குநடுவே நாலிதழுடைய ஒரு புட்பவட்டமாய் கடப்பம்பூப்போன்றிருக்கும், அந்தப்புட்பத்துக்கு நடுவில் ஓங்காரவெழுத்துநிற்கும் அந்த ஓங்காரத்திற்கு நடுவில் விக்கினேசுவரரும் வல்லபைசத்தியும் எழுந்தருளியிருப்பார்கள். பச்சைநிறமுள்ளது. அந்தநாலிதழிலும் நிற்கும் அட்சரங்களை இதற்கடியில்வரும் மூலாதாரசக்கரத்திற் காண்க.

இதற்குப் பிரமாணம்-திருமந்திரம்,


மாயலர்நாலையும் வட்டத்தின்மேலிடு
யாமலர்நாலிலும் வவ்வாதிசவ்விடு
மாயலர்நாலிலே வட்டத்தினுள்ளே
ஓமெனவிநாயகன் உலாவிநின்றானே,

ஒருவிடுவாசற இருவிடுமேலே
கருவிடுவாசற் றிருவிரல்கீழே
உருவிடுசோதியு மங்கையுமித்தன
திருவுடையாரிது தேர்ந்தறிவாரே.

இட்டானறிந்திலன் எத்தானுங்கண்டிலன்
தட்டானறிந்தான் ஒருவர்க்குமாத்திலன்
பெட்டயவளர்ந்து அதின்மேல்விநாயகன்
அட்டாங்கயோகத் துயர்ந்திருந்தானே.

ஓங்காரமென்னும் அவனொருபெண்ணும்
நீங்காப்பச்சை நிறமதுகந்தவன்
ஆங்காரமுடன் ஐவரைப்பெற்றவள்
ரீங்காசனத்திலிருந்தானே,

இது மூலாதாரமாம்.




இதற்கு இரண்டுவிரற்கடைக்குமேலிருப்பது சுவாதிஷ்டான ... ...

அது நாற்சதுரமும், அச்சதுரத்தினடுவே ஆறிதழ்களையுடைய ஒருபுட்ப வட்டமும், அதன்மத்தியிலே லிங்கபீடமும், வீணைத்தண்டினடியுமாயிலங்கி அதினடுமத்தியிலே நகார எழுத்து நிற்கும்.


அந்த நகாரத்தினடுவில் பிரமாவும், சரஸ்வதியும், வீற்றிருப்பார்கள். இது பிருதிவியின் கூறாகும், பொன்னிறமாம் அந்த புட்பத்தின் ஆறிதழ்களிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் சுவாதிஷ்டானசக்கரத்திற்காண்க

இது சுவாதிஷ்டானமாம்.



இதற்கு - அ - விரல்பிரமாணத்துக்குமேல் இருப்பது மணிபூரகமாம் இது கோழிமுட்டைபோல தசநாம்புநாடிகளும் சூழ நாடிக்கெல்லாம் வேரானது இதை உள்ளறிவுள்ளோர் உந்திக்கமலமென்றுஞ்சொல்லுவார்கள். இது தொப்புளுக்குநேரில் அப்புஸ்தானத்தில் ஏழாம்பிறைக்கிணங்கியிருக்கும், அதி னடுவே பத்து இதழையுடைய ஒரு புஷ்பம் வட்டமாயிருக்கும், அந்தபுஷ்பத்தினடுவில் மகாரவெழுத்து நிற்கும், அந்தமகாரத்தினடுவில மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் அமர்ந்திருப்பார்கள் பளிங்குநிறமுள்ளது, அந்தப்பத்திதழுடையதின்ற அட்சரங்களை இதற்கடியில்வரும் மணிபூரகசக்கரத்திற்காண்க.


இது மணிபூரகம்.



MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY


இதற்குமே ...த்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்குமேல் உள்ளது அநாகதமாகும். இது இதயகமலமாம். தேயுஸ்தானத்திலே முக்கோணமாயிருக்கும். அந்த முக்கோணத்தினடுவில் பன்னிரண்டிதழையுடைய ஒரு புட்பம் வட்டமாயிருக்கும். அந்தபுட்பத்தினடுவில் சிகாரவெழுத்து நிற்கும் அந்தசிகாரத்தினடுவில் ருத்திரனும் பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினிநிறத்தையுடையது அந்தப்பன்னிரண்டிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் தசக்கரத்திற்காண்க.

## இது அனாகதமாம்.



இதற்கு டத்துவிரற்கடைபிரமாணமுள்ள இடத்திற்குமேலுள்ளது விசுத்தியாம், இது கண்டத்தானத்திலே வாயுவுஸ்தானத்திலுள்ளது. அறுகோணமாயிருக்கும்-அந்த அறுகோணத்தினடுவில் பதினாறிதழையுடைய ஒரு புட்பம் வட்டமாயிருக்கும், அந்த புட்பவட்டத்தினடுவே வகாரவெழுத்து நிற்கும், அந்த வகாரத்தினடுவில் மகேசுவரனும் மகேசுவரியும் எழுந்தருளியிருப்பார்கள் கருநிறத்தையுடையது, அந்தப் பதினாறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் விசுத்திசக்கரத்திற்காண்க.

## இது-விசுத்தி.




இதற்கு - ௰௨ - விரற்கடை பிரமாணமுள்ள ஸ்தானத்திற்கு மேல் ஆக்ஞை லலாடபீடத்திலிருக்கின்றது வீணாத்தண்டின் முடியுமாய் ஊடுருவி பொன்போன்றவடிவமுற்றுநிற்கும், நெற்றிப்புருவத்தின்வெளியாய் ஆகாச ஸ்தானத்தில் மூன்றிதழையுடைய ஒருபுட்பத்தினடுவே யகாரவெழுத்தோடிணங்கிநிற்கும். அந்த யகாரத்துக்குநடுவில் சதாசிவமும் மனோன்மனியும் எழுந்தருளியிருப்பார்கள் மேகநிறத்தையுடையது, இதிலுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் ஆக்ஞைசக்கரத்திற்காண்க.

இதற்குத் திருமந்திரம்.

அம்பதெழுத்தே அமர்ந்தவேதங்கள்
அம்பதெழுத்தே ஆகமாதிகள்
அம்பதெழுத்தின் அறிவையறிந்தபின்
அம்பதெழுத்தே அஞ்செழுத்தாமே.

இது ஆக்ஞை.




இதுவே ஆருதாரவிக்ரமாம்.

இனி-மண்டலங்களாவன.

அக்கினிமண்டலம் ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம்-ஆக ௩.

இதில் அக்கினிமண்டலமானது மூலாதாரத்திற்கு இருவிரற்கடைக்குமேலிருக்கின்றது,

ஆதித்தமண்டலம்-உந்திக்கு நாலுவிரற்கடைக்குமே லிருக்கின்றது.

சந்திரமண்டலம்-கோடி சந்திரசூரியர்க ளுதயமானதுபோல சிரத்தினடுவில் நிலையாய்நிற்கும். இதை அமுர்தகலையென்று சொல்வதுமுண்டு, அமுர்தம் மேல்நோக்கி அக்கினி கீழ்நோக்கி சரியாய்

நிற்கும். இதற்குநடுவில் பராசத்தி எழுந்தருளியிருப்பாள் இதற்குப் பிரமாணம்,

திருமந்திரம்.

மேலைநிலத்தில் மேதகுபெண்ணே
மூலநிலத்தில் முளைத்தெழுசோதியே
ஏலவெழுப்பி யிசைந்தசந்திக்க
பாலருமாவார் பார்நந்தி ஆணையே.

இனி நாடி-௰-க்கும்-விவரம்.

இடைகலை பிங்கலை-சுழிமுனை-காந்தாரி அத்தி-உசா-அலம்புருடன்-குரு-சிங்குனி ஆக நாடி-௰.

இவைகளில்-இடை-பிங்கலை சுழிமுனை இம்மூன்றும் மூலாதாரத்தைச்சேர்ந்து ஆதாரம் ஆறிலும், மண்டலம் மூன்றிலும், ஊடுருவி மூட்டிநின்று இடை பிங்கலை இரண்டும் சுழிமுனையிலே இணைந்து கத்தரிக்கோல்போல் பாகமாறி வீணைத்தண்டுக்கு வில்லு நாணிட்டாற்போல கபாலத்தைமூட்டி குதிரைமுகமுற்று நாசியளவும் பற்றிநிற்கும்.

இம்மூன்றுநாடியும் இப்படி நிற்க காந்தாரியானது நாபிஸ்தானத்திலேதோன்றிஎழுவகையாகப்பிரிந்து இச்சா சொரூபமாய் கண்டத்தைப்பற்றி நாடியளவும் நிற்கும்.

அத்தி-உசா-இவ்விரண்டும்-௰-நாடியாய்ப்பிரிந்து கண்களிரண்டிலும் பற்றிநிற்கும்.

அலம்புருடன் பன்னிரண்டுநாடியாகப்பிரிந்துஜடத்திலுண்டாகிய எலும்பு நரம்பு உரோமம் இவைகளில்பரவி பாகமாறி வலது இடதுசெவிகளைப்பற்றிநிற்கும்.

குருவென்பது-நாபிஸ்தானத்திலே தோன்றி குதத்தைப்பற்றி நிற்கும்,

சிங்குனியோவெனில் நாபியிலேதோன்றி குய்யத்தைப்பற்றி நிற்கும், இவைகளில் உக-நாடி முற்பட்டதானதுகாண்க.

இனி வாயுக்களாவன.

பிராணன் அபானன்-வியானன் உதானன்-சமானன் - நாகன் கூர்மன்-கிருகரன்-தேவதத்தன் தனஞ்சயன்-ஆக வாயு-௰,

இத்துடன் வயிரவன்-முக்கியன்-அந்தரியாமி - பிரவஞ்சனன்-ஆகிய நான்கும் சேர-வாயுக்கள் ௰௪.

பிராணவாயுக்களாவன.

பிராணவாயுவானது லலாடமத்தியிலே தோன்றி சித்திரநாடியிலேயிருந்து மூலாதாரத்திலே ஓம் என்று உதித்து நாபிசக்கரத்திலே ரீம் என்று முட்டி இடைகலை பிங்கலைகளிலே ஓடி கபாலத்தைச்சுற்றி நாசியின்வழியாய் புறப்பட்டு நான்குவிரற்கடை பிரமாணங்கழிந்து போய் எட்டுவிரற்கடைபிரமாண மீந்து காணின்ற ஸ்தானத்திலேயே தாக்குகின்றது.

இப்படி தாக்குவது உற்சமிதெகிக்கு நாழிகை ஒன்றுக்கு முந்நூற்றறுபது சுவாசமாகக் கொல்லன்துருத்திக்குட் காற்றேறுவது போல ஏறும்.

இப்படி ஏறுகின்ற சுவாசமானது இராப்பகலாகிய அறுபதுநாழிகையுள்ள நாள் ஒன்றுக்கு உ௧௲௬௱ - சுவாசமாச்சுது. இவ்விதமாயினங்கியவற்றுள்-எ௲உ௱-சுவாசம் வெளிப்படும் பற்றவை உள்ளடங்குமென்றறிக.

அபானவாயுவானது-குதத்தையும் குய்யத்தையும்பற்றி மலமூத்திராதிகளைக் கழித்துவிடும்.

வியானன் தோளிலேநின்று பரிசங்களை யறிவித்துக் கலைகளை நிறைவிக்கும்.

உதானன் உதராக்கினியை யெழுப்பிஉண்ட அன்னசாரத்தை நாடிகளிற்செலுத்திச் சரீரத்தைவளர்க்கும்.

சமானன்-இவை யாவையும் சமப்படுத்தி பேதமில்லாமல் நிரவலாக்கிவைக்கும்.

கூர்மன்-நகைப்பும் முகலட்சணமும் கண்களியப்பும் புளகமும் மயிர்க்கூச்சலும் கொட்டாவியுமுண்டாக்கும்.

நாகன்-முக்கலும்-சோம்பலும் திமிரமும் விக்கலும் வீங்கலுமுண்டாக்கும்.

கிரிகரன் புருவ மெற்றுவித்தும், தும்முவித்தும் அழுவித்தும் திரியும்.

தேவதத்தன் விழிக்கும்பொழுது வஞ்சித்து ஓட உலாவ உயுத்தஞ்செய்யத் தலைப்படும்.

தனஞ்சயன்-பிராணன் சரீரத்தைவிட்டு வெளிப்பட்டபோதிலும் தான் பிரியாதுநின்று உடம்பை வீக்குவித்தும் விரிவித்தும் புழுவித்தும் கொய்தும் கபாலத்தைப்பிளந்துபோம்.

வயிரவன்-காலெலும்புங் கதிரெலும்புங்கூடிய விடத்திலேநின்று உடம்பில் அவத்தையுண்டாக்கி வாதம் ஈளை இருமல் முதலான நோய்களையுண்டாக்கும்.

முக்கியன்-கையெலும்பு-உ-ம்-கதிரெலும்புங் கூடிய விடத்திலே நின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்க நிறுத்தும்,

அந்தரியாமி-புருஷனுக்கு வாகனமாய்நின்று பிராணவாயுவை நீதேற்றுவிக்கும்.

பிரவஞ்சனென்னில் பிரணவத்துக் கிருப்பிடமாயிருந்து பிரவஞ்சனும் அந்தரியாமியும் சரீரத்திற்கு அடையாணியாகவும் அச்சாணியாகவும் இருப்பார்கள்.

தாதுக்களாவன.

ரசம்-உதிரம்-மாம்சம்-மேதை-அஸ்தி-மச்சை-சுக்கிலம் ஆக ௭.

இராகங்களாவன.

காமம்-குரோதம்-லோபம்-மோகம்-மதம்-மாச்சரியம்-இடும்பை-ஆங்காரம் - ஆக ௮

இவைகளில்-காமமாவது ஆசை, குரோதமாவது-கோபம், லோபமாவது உள்ளதை யொளித்தல் பொச்சாப்புக்கொள்கை. மோகமாவது தானல்லாதார்மரித்தால் தான்மரித்தாற்போலிருக்கை. மதமாவது கெர்வமுற்றுத் தான தர்ம பரோபகாராதிகளைவிலக்குதல், மாச்சரியமாவது ஒன்றைக்கண்டு மகிழ்தல், இடும்பையாவது தானே சர்வாதிகாரியென்று நினைத்து யாவரையும் இகழ்தல், ஆங்காரமாவது-தன்குற்றங்களை யறியாது பிறர்சொல்லைக்கேட்டுக் கோபித்தல்.

கோசமாவன.

அன்னமயம்-பிராணமயம்-மனோமயம்-விஞ்ஞானமயம்-ஆனந்தமயம்-ஆக ௫.

இவைகளில் தாதுக்களாலெடுத்தது அன்னமயகோசம்.

அன்னசாரத்தினலே பிராணனும்,பலனும் அடைகியது பிராணமயகோசம்.

பலத்தினலேவந்து தோற்றப்பட்டது மனோமயகோசம்.

அம்மனத்தின்கண்ணே தோற்றப்பட்டது விஞ்ஞானமாதலால் அது விஞ்ஞானமயகோசம்.

ஆனந்தமயமானது வித்தையால் அல்லது கல்வியால் ஞானம் வந்துதோற்றும் அது ஆனந்தமயகோசமாம்.

இதற்குப்பிரமாணம்.

சித்தியார்.

விருத்தம்.

தூலமாமன்னகோசந் தூலத்திற்பிராணனுற்றால்
வாலியபிராணகோசம் மன்னுமிம்மனோமயத்தால்
சாலவேபுத்தியுற்றால் தருமம்விக்ஞானகோசம்
ஏலவேவிடயமுன்போ லியன்றதுகோசமாமே.

அந்தக்கரணங்களாவன.

மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் ஆக ௪.

இவைகளில்-மனம் நினைக்கும், புத்தி நிச்சயிக்கும், ஆங்காரம்-கொண்டெழுப்பும், சித்தம்-மூன்றுக்கும் காரணமாயிருக்கும் இதற்குப் பிரமாணம்.

சித்தியார்.

விருத்தம்.

மனத்துக்கு.

ஐயமுஞ்சலனமு நிற்கச்செய்தலும்
வெய்யவெகுங்கொடுமையும் விதப்பமேவலும்
பொய்பதுணர்த்தலும் பொருத்தநோக்கலும்
மையல்கொண்டெழுதலு மறிவுமாண்மையும்.

புத்திக்கு விவரி.

அருளுறவிருத்தலும் அபயங்காத்தலும்
மருளுறுபுண்ணிய பாவமாட்சியும்

தெருளுறுவிகாரமுந் திடப்படுத்தலும்
பொருள்தருமூலகைப் புத்தியாகுமே.

ஆங்காரத்துக்கு.

பாகமூர்க்கமும் டண்பிலாண்மையும்
மோகமுஞ்செயமெண முடிவிலாமையும்
சோகமுங்கீழ்மையும் துரோகசொப்பனம்
மாய்கையுஞ்செய்யுமாங்காரமாதலால்.

சித்தத்துக்கு.

அருந்தவமுயற்சியு மடிகள்பேணலும்
விருந்தெதிர்கொள்கையும் மேன்மைகூறலும்
வருந்தினர்யாவரு பேதித்தவாழ்தலும்
திருந்தியவிச்செயல் சித்தமாருமே.

அவஸ்தையாவன.

சாக்கிரம்-சொப்பனம் சுழுத்தி துரியம் - துரியாதீதம் ஆக ரு.

இவ்வைந்தினுள் - சாக்கிரமானது புருவமத்தியில்நின்று ராஜ ஒலக்கம்போல சதுரங்கபலத்துடனே யிருந்து சத்த பரிச-ரூப - ரச கந்தம்-இவ்வைந்துடனும், வசன-கமன-தான-விசற்க - ஆனந்தமெ ன்னும் இவ்வைந்துடனும், மனம்-புத்தி சித்தம்-ஆங்காரம்-இந்த நாலும்சேர்ந்து கருவிகளுடன் சன்னதியில் சேவிக்க தான் பராசத்தி யருளாலே வியக்தனாய் சுகதுக்கங்களை அறிந்து நின்றபோது சாக்கி ரமாயின.

இதற்குப்பிரமாணம்.

திருமந்திரம்.

கண்டனவைந்துங் கலந்தவோரைந்தும்
உண்டனநான்கும் ஒக்கவுணர்ந்தபின்
பண்டையினுறி பாந்தகசாக்கிரம்
உண்டமுந்தாறு யமர்ந்ததுகாணே.

செப்பனமாவது-கருவி-காணுதி-மெசல்-கருவிபத்தும் கண்டத் திற்கும்,

மற்ற கரணாதி-ச-ம்-சுழுத்தியோடு சிவாத்துமாவைக்கூடி கனாசயிருதயத்திலே நின்றபோது-கண்டவை-கேட்டவை-ஒன்றும் பிறர்க்குச்சொல்லப் புலப்படாதபோது சுழுத்தியாம்.

இதற்குப்பிரமாணம் - திருமந்திரம்.

ஆணமனமும் அறிகின்றபுத்தியும்
ஊனையிழந்துநின் றுள்ளேஉயிர்ப்பெய்தி
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஊனையிழந்த சுழுத்திபதாமே.

---

துரியமானது சுழுத்தியைவிட்டுக் கரணமொன்றுடனே சிவாத்துமா நாபித்தானத்தில் நின்றபோது சுவாச நிசுவாசப்பிறக்கும் ஆகையால இதற்குத் துரியமென்று பெயர்.

இதற்குப்பிரமாணம் திருமந்திரம்.

தானத்தெழுந்ததிரியுந்துரியதானம்
வானத்தெழுந்தபோய்வையப்பிறக்கிட்டு
கானத்தெழுந்து கருத்தி தலையிலே
ஊனைத்தவிர்ந்து ஒளிரிருந்தானே.

---

துரியாதீதமாவன.

கருவி கரணாதி பதினாலும் பற்றற்று சிவாத்துமாதமனே மூலாதாரத்திற்சென்றேறங்கி மலம்-மத்நம்-மாய்கை-பரிசங்களை யறியாமல்நின்றபோது துரியாதீதமென்று பேராம்.

திருமந்திரம்.

துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரிபன்பதினொன்கும் நஞ்சுண்டற்றது
பரியபுரவியும் பாரிப்பார்க்கிடம்
துரியமிருந்திடுஞ் சொல்லவொண்ணாதே.

கேவலாவத்தையாவன.

அதீதத்தை முதலாகக்கொண்டு ஒருவனை முன்னொருகாலத்தில் நாமறிந்திருக்க அவன் சிறிதுநாளைக்குப்பிறகு நமது முன்வந்து என்னையறிவீராவென்ன நானறியேனென்று நின்றவிடம்- அதீதம்-

அதைக்குறித்து நிதானித்தணருமிடம் துரியம், ஆமோ அல்லவோ வென்று சந்தேகிக்குமிடம் சுழுத்தி, மனத்தோற்ற மூற்றது சொப்பனம், நீ இன்னுனென்று நிச்சயித்தறிவது சாக்கிரமாம்.

இதற்குப்பிரமாணம்.

அறிவானந்தசித்தியார்.

முன்னேயறிந்தும்அறியாதிருந்ததுமுதலதீதம்
பின்னே நினைவின்றிமூச்சிட்டிருந்தபிறைதுரியம்
மன்னேமயங்கியையுற்றசுழுத்தியெனநினைவால்
தன்னேர்கனவதுதானறிந்தொத்ததுசாக்கிரமே.

மத்தியாலவத்தை.

சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம்.

இவற்றுள் சாக்கிரத்துள் சாக்கிரமானது கருவிகாணங்கள் பிரியாமல் ஒத்துநிற்பதாம்.

சாக்கிரத்திற் சொப்பனமானது - தான் நிச்சயம்போல்கண்டது கேட்டது சொல்லவறியாததுவாம்.

சாக்கிரத்திற் சுழுத்தியானது - நினைவுமாத்திரம் பொய்யாய் பிறருக்குச் சொல்லவொண்ணுதிருக்கை. இது உசுவாச நிசுவாசமாக இருந்தலாம்.

சாக்கிரத்தில் துரியமானது சகலகருவிகாணுதிகளுக்கும் அடங்கி பருமிருக்கையும், நித்திரைவருகையும், அவசமாய் விழுகையும் புருவமத்தியிலே நடுச்சக்கரத்திலே யுள்ளது.

மேலாலவத்தையாவன.

புருவமத்தியில் நடுச்சக்கரத்தில் இரண்டங்குல பிரமாணத்திலேயுள்ளது சொப்பனம்.

இதற்குமேல் இரண்டங்குலபிரமாணத்திலுள்ளது-சுழுத்தி.
இதற்குமேல் இரண்டங்குலபிரமாணத்திலுள்ளது-துரியம்.
இதற்குமேல்-இரண்டங்குலபிரமாணத்திலுள்ளது துரியாதீதமாம்.

## இதற்குப்பிரமாணம்-திருமந்திரம்.

காலத்தி னீரிற் கலந்துடனாகாசம்
மாலங்கியீசன் பரமசதாசிவன்
மேலஞ்சுசென்று விரவவல்லார்க்குக்
காலனாரிலை கணிதமுமில்லையே.

### அவத்தையாவன.

சகலாவத்தை-கேவலாவத்தை-சுத்தாவத்தை-ஆக ௩.

சகலாவத்தையானது சாக்கிரத்தில் கருவிகரணாதிகளுடன் கூடி அந்தக்கரணங்களுக்கு நினைவாயிருக்கும்.

கேவலாவத்தையோவெனில் மூலாதாரத்தைப்பற்றி ஆணவமேலிட்டு ஒன்றுந்தெரியாமல் கிடக்கை.

சுத்தாவத்தையோ-சகலாவஸ்தையில் கருவிகரணாதிகளுடன் கூடிநின்று அலைச்சல் பிறவாமை, கேவலாவத்தையில் ஆணவக்கிடையில் அறியாமை பிறவாமலும் ஆசாரியானுக்கிரகத்தினாலே இவையிரண்டிலும் பற்றாமல் சுத்தத்தோடே கூடிநிற்கை

### குணங்களாவன.

ராஜசம்-தாமசம்-சாத்வீகம்-ஆக ௩.

ராசதமானது-அத்தி-களிப்புற்றிருத்தல்-ஆங்காரம்-போகம்-அத்தசேதம்-இடும்பை கீர்த்தி-கொடை-தருதலாம்.

தாமசமானது-நித்திரை-கனவு-கள்ளுண்ணல் சோம்பு-வெட்டிசிரிப்பு இவைகளாம்.

சாத்துவீகமோவெனில்-கொல்லாமை-பொய்யாமை-அருவருக்கை-பொறையுடைமை-விரதமுடைமை-அடக்கமுடைமை-யாவரையும் இகழாதொழித்தலாம்.

இவைகளில் ஒவ்வொன்றுக்கு மும்மூன்றுகுணங்கள்காண்க.

தாமதராஜசம்-தாமததாமசம்-தாமதசாத்வீகம்- தாமதகுணவிரிவே சாத்வீகதாமதம் சாத்வீக ராஜசம் சாத்வீக சாத்வீகமாம், சாத்

வீகருணவிரிவே-ராஜசதாமதம், ராஜசசாத்விகம், ராஜச ராஜசம்-ரா ஜசருணவிரிவே.

—— * ——

மலங்களாவன.

ஆணவம்-மாயை-காமியம்-ஆ ங.

இவைகளில்-ஆணவமானது ஆத்துமாவின் அறிவைமறந்த-யான்-எனதென்றும், அறியாமை யெனவையும் பிறப்பித்து, தன்னுடைமையும் புத்திர மித்திர-களத்திராதிகளும் - தாய் பிரியமாய் இதில் நாம் மயங்குகிறோமென்று இவனுக்குந்தெரியாமல் ஒறைப்பித்து ஆசையுண்டாக்கிக்கொண்டு தன்னதென்றிருக்கை.

மாயையானது-வேறொருவருடைய சொத்தைத் தன்னதென்று இடைபூறு விளைவிப்பதும், உபத்திரவிக்க யத்தனிப்பதுமாம்.

காமியமானது-முந்திய இரண்டினத்திற்கு ஒத்திருப்பதாய், இது தாகிதத்தினுல் புண்ணியபாவங்களை யுண்டாக்குவதுமாம்.

இதன்றி மகாமாயையென்றும் திரோதானமென்றும் இரண்டு விசேஷமுண்டு.

மகாமாயையானது தநுகரண புவன போகங்களைக் கொடுத்து ஒன்றோடொவ்வாமல் புசிப்புளும் வேவ்வேறுப் அருசியாய் ஆத்துமாவுக்குள்ளபோகந் தவிர்ந்தாலும் இந்தத்தன்மை இரண்டுகாலத்திலும் ஒக்கும்.

ஆத்துமாவைத் தன்னிடத்திலும் இளைப்பாறிக்கிடத்த இடங்கொடுத்து பின்பு ஜனங்களுக்கும் பந்தியாயிருக்கும்.

திரோதானமானது - சிவசத்தியினது பதவியைத்திரோபாவித்து நின்று ஆத்மாக்களுக்குப் புண்ணியபாபங்களையும் மட்டும் பொசிப்பித்து சிவசத்தியுடனே கூட்டும்.

—— * ——

ஈஷணை மூன்றுவன.

அர்த்தஈஷணை- புத்திரேஷணை - லோகேஷணை ஆ ங.

இது தன்னையடைத்தானென்பதாம்.